[24th April 1959

(*e*) *Adanur, Panchanadhikulam Melsethi, Thanikottagam and Ayakkarambalam II Sethi.*—The matter is under consideration of the Public Works Department.

Thannadar and Voimodu.—Agreements are being obtained from the ryots concerned for payment of water charges, etc., before execution of the sanctioned schemes.

Kallimodu.—The scheme was dropped as the ryots were unwilling to bear the cost.

SRI A. VEDARATHNAM : இப்பொழுது புதிதாக எடுக்க உத்தேசித்திருக்கும் பம்பிங் ஸ்கீம் வேலைகள் எல்லாம் எப்பொழுது துவக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது பற்றி பரிசீலனை முடிந்த பிறகு விவசாயிகளிடம் ஒப்பந்தம் வாங்கிக்கொள்ளப்படும். அது கிடைத்ததும் துரிதமாக வேலை துவக்கப்படும்.

SRI T. VELUCHAMI : இந்த பம்பிங் ஸ்கீமின் மூலம் 'இர்ரெகுலர் இரிகேஷன்' என்ற அடிப்படையில் வாட்டர் ரேட் போட அருகதை ஆகிவிடுமல்லவா ? அதைத் தடுக்க ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த பம்பிங் ஸ்கீம் உருவாக்கும் பொழுது இதற்கு எவ்வளவு செலவாகிறது ? விவசாயிகள் எவ்வளவு கொடுத்தால் கட்டுப்படியாகும் என்றெல்லாம் பார்த்து அதற்குத் தகுந்தபடி திட்டம் உருவாக்கப்படும்.

SRI T. SAMPATH : இந்த ஸ்கீம் மற்றைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி ரிவர் பம்பிங் ஸ்கீமுக்கு வசதி இருந்தால் விஸ்தரிக்கப்படும். எந்தெந்த இடங்களில் வசதி இருக்கிறதோ அங்கெல்லாம் இதை விஸ்தரிப்பதாக திட்டம்.

SRI M. K. SOMASUNDARAM : இந்த பம்பிங் ஸிஸ்டத்தால் எத்தனை ஏக்கர் பலனடைகிறது என்று தெரிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது ஒவ்வொரு திட்டத்திற்கும் எவ்வளவு ஏக்கர் என்று கணக்குக் கொடுத்தேன். அதை எல்லாம் மொத்தமாகக் கூட்டிப் பார்த்தால் எவ்வளவு என்று தெரியும்.

Salaries of teachers

* 128 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have revised the scale of pay of teachers who are employed after 1st July 1958 in elementary and secondary schools?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

24th April 1959]

SRI N. K. PALANISAMI : 1958-ம் வருஷத்திற்குப் பிறகு இந்த ஆசிரியர்களுடைய சம்பளம் என்ன காரணத்தினால் மாற்றி அமைக்கப்படவில்லை ? மாற்ற ஏதாவது உத்தேசம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இவர்களுக்கு மட்டும் எதற்காக மாற்றி அமைக்க வேண்டும் என்ற காரணம் எனக்குத் தெரியவில்லை. எல்லா ஆசிரியர்களுக்கும் எந்தச் சம்பளம் கொடுக்கப்படுகிறதோ அந்தச் சம்பளம் இவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது.

SRI N. MARUDACHALAM : அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 5 ரூபாய் மானியம் கோவை முனிசிபாலிடி ஆசிரியர்களுக்கு ஏன் வழங்கப்படவில்லை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கோவை முனிசிபாலிடியைக் கேட்டால் தெரியும்.

Registration of Homœpathic doctors

* 129 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any Statutory Board has been constituted in the State for the registration of Homœopathic doctors having certain standard of education and training; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI N. K. PALANISAMI : சர்க்கார் இந்த ஹோமியோபதி ஸிஸ்டத்தை கொள்கையளவில் ஒப்புக்கொண்டிருப்பதின் காரணமாக ஏன் ஐந்து வருடம், ஆறு வருடம் பயிற்சி பெற்ற இந்த வைத்தியர்களை ரிகக்னைஸ் செய்து சர்டிபிகேட் கொடுக்க ஏற்பாடு செய்யக் கூடாது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The idea is to recognize the homœopathic system of medicine but the formalities of recognition have not yet been completed.

SRI G. G. GURUMURTHI : கிராமங்களில் ஹோமியோபதி வைத்தியர்கள் 50 ரூபாய் கட்டி லைசென்ஸ் பெற்றுக்கொண்டு ஹோமியோபதியோடு அல்லாமல் அலோபதி மருந்துகளும் கொடுத்துவருவதைத் தடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ? அல்லது அவர்களுக்கு ரெகுலராய் ஒரு காலேஜ் வைத்து சர்டிபிகேட் வழங்குவதற்கு ஏதாவது திட்டம் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கிராமங்களில் ஹோமியோபதி முறையைக் கொண்டு மட்டும் வைத்தியம் செய்யவில்லை. எவ்வளவோ விதத்தில் நாங்களும் வைத்தியர் என்று சொல்லிக்கொண்டு சர்வரோக நிவாரணி மருந்து கிடைக்கும் என்று போர்ட் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

SRI A. A. RASHEED : Will the Government stop the use of the title or prefix 'Dr.' to their names by these Homœopathic practitioners?